செ.வெ.எண்:93 நாள்:31.10.2018

**கரூர் மாவட்டம்**

**ஜெராக்ஸ் ஆபரேட்டர், அலுவலக உதவியாளர், இரவுக்காவலர், துப்புரவு பணியாளர் உள்ளிட்ட பல்வேறு காலிப்பணியிடங்களுக்கு தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்-முதன்மை மாவட்ட நீதிபதி அவர்கள் தகவல்.**

கரூர் மாவட்ட நீதித்துறையில் **சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை □ III (தற்காலிக பணியிடங்கள்) முதநிலைக்கட்டளைப் பணியாளர், ஜெராக்ஸ் ஆப்ரேட்டர், அலுவலக உதவியாளர், சுகாதாரப்பணியாளர், இரவுக்காவலர், துப்புரவுபணியாளர், மசால்சி மற்றும் இரவுக்காவலர், மசால்சி** பதவிகளை நிரப்பிட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மேலும், வயது, கல்வித்தகுதி, விண்ணப்படிவம் மற்றும் அனைத்துவிதமான விபரங்களும் இந்நீதிமன்ற இணையதளத்தில் **(https://districts.ecourts.gov.in/tn/karur)** பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

தகுதியான நபர்கள் மட்டும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து அதில் வெளியிடப்பட்டுள்ள அறிவுரைகளை கவனமாக படித்து விண்ணப்பத்தை பூர்த்தி செய்து. தேவைப்படும் சான்றிதழ்களின் நகல்களை விண்ணப்பத்தோடு இணைத்து இந்நீதிமன்ற அலுவலகத்திற்கு ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவுத் தபாலில் **16-11.2018-ஆம்** தேதி **மாலை 5:45** மணிக்குள் கிடைக்குமாறு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**

**கரூர்.**